<u>சார்பு நீதிமன்றம், திருமங்கலம்.</u>

<u>O.S. No.15/2021 [CNR No.TNMD1D–000051–2021], 06.08.2026</u>

<u>பி.வா.சா.1– பெரியகருப்பன், திரும்ப அழைக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.</u>

5) நான், இவ்வழக்கில் மூன்றாம் பிரதிவாதி, முதலாவது பிரதிவாதி, என் மாமியார். இரண்டாம் பிரதிவாதி, என் மனைவி. நான்காம் பிரதிவாதி, என் மகனாவார். வழக்கு நிலுவையில் உள்ளபொழுது, முதலாவது பிரதிவாதி இறந்துபோய்விட்டார். நான், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்து, பணி நிறைவு பெற்று விட்டேன். வாதி, இவ்வழக்கை தாக்கல் செய்தது, கடந்த 07.01.2021–ம் தேதி. வாதி, இவ்வழக்கை, இரண்டு லக்கச்சொத்துக்கள் சம்பந்தமாக தாக்கல் செய்திருக்கிறார். வழக்குரை முதலாவது லக்கச்சொத்து, மேலகுயில்குடி கிராம சர்வே எண்.58/6எ–ல் கட்டுப்பட்ட, 19–செண்டில், தென்புறமுள்ள 3 1/2–செண்டு என்றால், சரிதான். வழக்குரை இரண்டாவது லக்கச்சொத்து, மேலகுயில்குடி கிராம சர்வே எண்.58/6சி–ல் கட்டுப்பட்ட, 7 1/2–செண்டு என்றால், சரிதான். வாதி, வழக்குரையில் சொல்லியிருக் கிற வழக்கு விபரங்களை படித்து தெரிந்து கொண்டேன். வாதி, இவ்வழக்கோடு தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் பற்றியும் தெரிந்து கொண்டேன்.

6) நீர், வா.சா.ஆ.1–கடந்த 10.10.1979–ம் தேதிய, பதிவு கிரையப்பத்திரத்தின் நகலை, படித்துப்பார்த்திருக்கிறீரா என்றால், படித்துப்பார்திருக்கிறேன். வா.சா.ஆ.1–பதிவு கிரையப்பத்திரத்தில் கண்ட சொத்திற்கு, வடக்கே–சுப்பையா இடம் என்றும், கிழக்கே– தென்வடல் ரோடு என்றும், தெற்கேயும் மற்றும் மேற்கேயும்–சின்னத்தேவர் இடம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால், ஆமாம், அவ்வாறு தான் குறிப்பிடப் பட்டிருக்கிறது. வா.சா.ஆ.1–பதிவு கிரையப்பத்திரத்தில் கண்ட சொத்துதான், வழக்குரை முதலாவது லக்கச்சொத்து என்றால், சரிதான். வழக்குரை இரண்டாவது லக்கச்சொத்து, வா.சா.ஆ.2–கடந்த 22.06.2024–ம் தேதிய கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் சொத்து தான். வா.சா.ஆ.1, 2–ஆவணங்கள் முறையே, 47, 52–வருட பழைமை யானவைகள் என்றால், ஆமாம், வாதி, அந்த பத்திரங்களை பதிந்ததே தவறு. வா.சா.ஆ.1–கிரையப்பத்திரம், வாதி பெயரில்தானே கிரையம் பெறப்பட்டிருக்கிறது என்றால், அது சரிதான், ஆனால், அது தவறு.

7) நீங்கள் எந்த அடிப்படையில் வா.சா.ஆ.1, 2–கிரையப்பத்திரங்களை தவறு என்று கூறுகிறீர் என்றால், வாதி, யு.டி.ஆரின்பொழுது, தவறுதலாக அவரது கிரைய தாரரான சுப்பையாவின் பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை வைத்து, அந்த கிரையப் பத்திரங்களை எழுதி பெற்றிருக்கிறார். வா.சா.ஆ.2–கிரையப்பத்திரம், வாதியின் பெயரிலும், அவரது சகோதரர் பெயரிலும் இருக்கிறது என்றால், அந்த விபரம் சரிதான். வழக்குரை முதலாவது லக்கச்சொத்தை, சுப்பையாகுடும்பனும், அவரது குமாரரான வேலாயுதமும் சேர்ந்துதானே, கடந்த 10.10.1979–ம் தேதியில், வாதிக்கு வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால், கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள், அந்த கிரையம் தவறுதலாக செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது. வழக்குரை இரண்டாவது லக்கச்சொத்தை, ஆறுமுகம் மனைவி கம்மாலாட்சியும், அவரது குமாரரான முனியாண்டியும் சேர்ந்துதானே, கடந்த 22.06.1974–ம் தேதியில், வாதிக்கும் மற்றும் அவரது சகோதரருக்கும், வா.சா.ஆ.2–கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்றால், கிரையம் செய்து கொடுத்திருக்கிறார்கள், அந்த கிரையம் தவறுதலாக செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

8) வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில் கண்ட சொத்திற்கு மேற்கே, சின்னாத்தேவர் நிலம் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால், ஆமாம். அந்த சின்னாத் தேவர்தானே, முதலாவது பிரதிவாதியின் கணவரின் தகப்பனார் என்றால், சரிதான். சர்வே எண்.58/6–ல் மொத்தம் எவ்வளவு நிலம் கட்டுப்பட்டிருந்தது என்றால், 19–செண்டு. நீங்கள், சர்வே எண்.58/6–ல் மொத்தம், 19–செண்டு கட்டுப்பட்டிருந்தது என்பதை, எந்த ஆவணத்தின் மூலம் தெரிந்து கொண்டீர் என்றால், பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரம், பி.வா.சா.ஆ.2–பாகப்பத்திரம் மற்றும், பி.வா.சா.ஆ.3–தானப்பத்திரத்தின் மூலம் தெரிந்து கொண்டேன். பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரம், யாரால் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால், அது, முதலாவது பிரதிவாதியின் கணவரின் தகப்பனாரான சின்னாத்தேவருக்கு, அழகர்குடும்பன் மகளும், குமராண்டியின் மனைவியுமான கம்மாளாட்சி எழுதிக்கொடுத்ததாகும். பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில், சொத்து விபரத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், முதலாவது லக்கச்சொத்து, சர்வே எண்.58/1பி–ல் கட்டுப்பட்ட 85–செண்டு நிலமாகும்.

9) இரண்டாவது லக்கச்சொத்தாக, சர்வே எண்.58/1இ–ல் கட்டுப்பட்ட 19–செண்டு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில் கண்ட இரண்டு லக்கச்சொத்துக்களுக்கும், தனித்தனியாக நான்குமால்கள் குறிப்பிடப்பட்டிருக் கிறதுதானே என்றால், ஆமாம். பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில் கண்ட இரண்டாவது லக்கச்சொத்திற்கு, தெற்கே, அழகர்குடும்பன் நிலம் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக் கிறதா என்றால், ஆமாம், அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அது சரிதான். பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில் கண்ட இரண்டாவது லக்கச்சொத்திற்கு தெற்கே இருப்பதாக சொல்லும் அழகர்குடும்பனுக்கு, சுந்தரம், கம்மாளாட்சி என்ற இரண்டு பெண்மக்களா என்றால், அது பற்றி எனக்குத்தெரியாது. மேற்சொன்ன சுந்தரத்தின் கணவர் பெயர், சுப்பையாகுடும்பன் என்றால், அது பற்றி எனக்குத்தெரியாது. மேற்சொன்ன சுந்தரத்தின் கணவரான சுப்பையாகுடும்பன்தான், வழக்குரை முதலாவது லக்கச்சொத்தை, வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தின் மூலம், வாதிக்கு கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால், அது பற்றி எனக்குத்தெரியாது.

10) மேற்சொன்ன சுந்தரத்தின் உடன்பிறந்த சகோதரியான கம்மாளாட்சியும், அவரது மகனான முனியாண்டியும், வழக்குரை இரண்டாவது லக்கச்சொத்தை, வா.சா.ஆ.2–கிரையப்பத்திரத்தின் மூலம் வாதிக்கும், அவரது சகோதரரான கருப்பையா விற்கும் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால், அது தவறு. பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில் கண்ட இரண்டாவது லக்கச்சொத்திற்கு தெற்கே, அழகர் குடும்பனுக்கு பாத்தியப்பட்ட, 19–செண்டு நிலமிருந்ததா என்றால், அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், அந்த நிலம் தற்சமயம் எங்கள் அனுபவத்தில் உள்ளது. நீங்கள், வழக்குரை இரண்டாவது லக்கச்சொத்திற்கு தெற்கே உள்ள, 19–செண்டு நிலம், உங்களது அனுபவத்தில் இருக்கிறது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்திருக்கிறீர் என்றால், பட்டா, பத்திரம், அந்த 19–செண்டானது, சர்வே எண்.58/7எ, 58/7சி–ல் கட்டுப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்லும் சர்வே எண்.58/7எ, 58/7சி–பற்றிய விபரம், பி.வா.சா.ஆ.1–கிரையப்பத்திரத்தில் இல்லைதானே என்றால், ஆமாம், குறிப்பிடப் படவில்லை. நீங்கள் சொல்லும் பட்டா, பத்திரம், அழகர்குடும்பன் பெயரில் இருந்ததா என்றால், இல்லை, ஆனால், வீரணன் மனைவி கம்மாளாட்சி என்பவர் பெயரில் இருந்தது.

11) நீங்கள், வீரணன் மனைவி கம்மாளாட்சி பெயரில் இருந்த ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறீரா என்றால், இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வீரணன் மனைவி கம்மாளாட்சி என்பவர் வேறு, குமராண்டி மனைவி கம்மாளாட்சி என்பது வேறு. வீரணன் மனைவி கம்மாளாட்சி பெயரில் ஆவணங்கள் இருக்கிறது. வா.சா.ஆ.1, 2 –கிரையப்பத்திரங்கள் தவறு என்ற விபரம், உங்களுக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால், பி.வா.சா.ஆ.4–ஆவணத்தின்படி, கடந்த 2009–ம் ஆண்டு, தெரியவந்தது. நீங்கள், கடந்த 2009–ம் ஆண்டிலிருந்து, வா.சா.ஆ.1, 2 –கிரையப்பத்திரங்கள் தவறானவைகள் என்று, ஏதாவது ஒரு சட்டநடவடிக்கை எடுத்தீரா என்றால், வட்டாட்சியர் மற்றும் உயர்நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நீங்கள், வா.சா.ஆ.1, 2 –கிரையப்பத்திரங்கள் குறித்து, கடந்தத 2009–ம் ஆண்டிலேயே, வட்டாட்சியரிடம் நடவடிக்கை எடுத்ததற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால், இருக்கிறது, ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நீங்கள், வா.சா.ஆ.1, 2–கிரையப்பத்திரங்கள் குறித்து, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில் நடவடிக்கை எடுத்ததாக சொல்லும் ஆவணம் தான், பி.வா.சா.ஆ.5.

12) நான், வா.சா.ஆ.1, 2–கிரையப்பத்திரங்கள் குறித்து, உங்களுக்கு கடந்த 2009–ம் ஆண்டு தெரியவந்தபின்பு, அவைகளை ரத்துசெய்யக்கோரி உரிமையியல் நீதிமன்றத்தில், இன்றுவரை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். உங்களுக்கு, வா.சா.ஆ.1, 2–கிரையப்பத்திரங்களில் கண்ட கிரையதாரர்களின் பெயரில், வழக்குரை முதல் மற்றும் இரண்டாவது லக்கச்சொத்துக்களை பொறுத்து, தவறுதலாக யு.டி.ஆரின்பொழுது, பட்டா வழங்கப்பட்டுவிட்டது என்ற விபரம், எப்பொழுது தெரியும் என்றால், கடந்த 2009–ம் ஆண்டு. யு.டி.ஆர் ஏற்பட்ட வருடம், எனக்குத்தெரியாது. நீங்கள், வழக்குரை முதல் மற்றும் இரண்டாவது லக்கச்சொத்துக்களை பொறுத்து, யு.டி.ஆர் ஆவணங்களை சரிபார்த்தீரா என்றால், சரிபார்த்தேன். நீங்கள் என்னென்ன ஆவணங்களை வைத்து சரிபார்த்தீர் என்றால், 1956–பத்திரம், 1966–பத்திரம். வழக்குரை முதல் மற்றும் இரண்டாம் லக்கச்சொத்துக்களை பொறுத்து, யு.டி.ஆருக்கு முன்புள்ள சிட்டா, அடங்கல், போன்ற வருவாய் ஆவணங்களின் நகல்களை பெற்றுப்பார்த்தீரா என்றால், பார்க்கவில்லை.

13) பி.வா.சா.ஆ.4–தகவலில், வழக்குரை முதல் மற்றும் இரண்டாம் லக்கச்சொத்துக்களை பொறுத்து, யு.டி.ஆருக்கு முன்பும், மற்றும் பின்பும் உள்ள வருவாய் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருக்கிறதா என்றால், இணைக்கப்படவில்லை, ஆனால், அதை வழங்கிய அலுவலர், சர்வே எண்.58/6எ, 58/6சி–ஐ பொறுத்து, சுப்பையா என்பவர் பெயரில், தவறுதலாக பட்டா வழங்கப்பட்டுவிட்டதாக கூறியிருக்கிறார். நீங்கள், பி.வா.சா.ஆ.4–ன் அடிப்படையில் தான், யு.டி.ஆரின்பொழுது தவறு நடந்ததை தெரிந்து கொண்டீரா என்றால், ஆமாம். யு.டி.ஆரின்பொழுது ஏற்பட்ட தவறை வைத்துதான், வா.சா.ஆ.1, 2 –கிரையப்பத்திரங்களில் கண்ட கிரையதாரர்கள், வழக்குரை முதலாவது லக்கச்சொத்தை, வாதிக்கும், வழக்குரை இரண்டாவது லக்கச் சொத்தை வாதிக்கும், அவரது குமாரருக்கும் எழுதிக்கொடுத்துவிட்டதாக கூறுகிறீரா என்றால், ஆமாம். நான் சொல்வதுபோல், யு.டி.ஆரின் பொழுது வழக்குரை முதல் மற்றும்இரண்டாவது லக்கச்சொத்துக்களை பொறுத்து, வா.சா.ஆ.1, 2 –கிரையப் பத்திரங்களில் கண்ட கிரையதாரர்களின் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால், அது சரியல்ல. வா.சா.ஆ.1, 2 –கிரையப்பத்திரங்களில் ஏற்பட்ட பின்புதான், யு.டி.ஆரே ஏற்பட்டது என்றால், ஆமாம், ஆனால், அவைகள் தவறானவைகள்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி நேரமின்மையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது</u>.

Taken down by me in the open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

PRABAKARAN Digitally signed by PRABAKARAN Date: 2026.08.06 18:52:59 +0530

Sub Judge,
Thirumangalam.